**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 408** **நாள்: 20.08.2026**

**அம்பத்தூர் மண்டலம், வார்டு-89க்குட்பட்ட இளங்கோ நகரில் உள்ள மயான பூமியில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுவதால், பொதுமக்கள் முகப்பேர் பிரதான சாலையில் உள்ள நவீன எரிவாயு தகனமேடையினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம், வார்டு-89க்குட்பட்ட இளங்கோ நகரில் உள்ள மயான பூமியை நவீன எரிவாயு தகனமேடையாக மாற்றி அமைக்கும் பணி நடைபெறுவதால் 24.08.2026 முதல் 23.10.2026 வரை மேற்கண்ட மயானபூமி இயங்காது.

எனவே, பராமரிப்புப் பணிகள் நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் அருகிலுள்ள வார்டு-86க்குட்பட்ட முகப்பேர் பிரதான சாலையில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**